## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

*15th ஜூன் / June 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service*

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Call to Worship — Mrs. Hency Melbin

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. ஹென்சி மெல்பின்**
Prayer — Mrs. Hency Melbin

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

**கர்த்தர் தாம் எங்கள் துர்க்கமும்**

*1. கர்த்தர் தாம் எங்கள் துர்க்கமும்*
*அரண பலமுமாமே*
*உண்டாம் இக்கட்டனைத்தையும்*
*போக்குவார் அவர் தாமே*
*பொல்லாங்கனின் சினம்*
*இப்போது மா விஷம்,*
*துஷ்டமும் சூதையும்*
*அணிந்து உறுமும் -*
*நிகர் புவியில் இல்லை.*

*2. எதற்கு நாங்கள் வல்லவர்?*
*இந்நீசர் சக்தியற்றோர்*
*எங்களுக்காய் வேறொருவர்*
*போர்செய்வதற் கேற்பட்டோர்.*
*ஆர்? இயேசு கிறிஸ்துதான்*
*ஆ இந்தப் பலவான்*
*ஆம் எங்கள் ரட்சகர்,*
*சேனாபதி அவர்,*
*ஜெயிப்பார் அவர்தாமே.*

*3. விழுங்க வரும் பேய்களால்*
*புவி நிரம்பினாலும்*
*பயப்படோம் கர்த்தாவினால்*
*எதிர்த்து நிற்கக்கூடும்.*
*இருளின் பிரபு*
*சீறினாலும் அது*
*நசுக்கப்பட்ட பேய்,*
*தள்ளுண்ணத் தீர்ந்ததே;*
*ஓர் சொல்லினால் ஒழியும்.*

*4. பகைஞர் தெய்வ வார்த்தையை*
*பகைத்தும், அது நிற்கும்;*
*கர்த்தர் சகாயர், அவர் கை*
*வரம் தந்தாதரிக்கும்.*
*மாற்றார்கள் யாவையும்*
*ஜீவனையேதானும்*
*வாங்கினால், கேடாமோ?*
*இராஜ்ஜியமல்லோ*
*எங்களுக்கே யிருக்கும்.*

**மாறி வாசித்தல் 24ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
✝ "சங்கீதம் 72" — Congregation

"நீதி நியாயம் செழித்தோங்குக"

**Psalter Reading "Psalm 72"**

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**
Thanksgiving & Pastoral Prayer

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord's Prayer — Congregation

**Prayer for Father's Day**

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

**அல்லேலூயா கர்த்தரையே**

*1. அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்*
*அவர் நடத்தும் செயல்களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்*
*வல்லமையாய்க் கிரியை செய்யும் வல்லோரைத்துதியுங்கள்*
*எல்லோரையும் ஏற்றுக்கொள்ளும் இயேசுவைத் துதியுங்கள்.*

**இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்**
**பூமியில் ஆட்சி செய்வார்;**
**அல்லேலூயா அல்லேலூயா**
**தேவனைத் துதியுங்கள்**

*2. தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்*
*இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்*
*எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்*
*எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள்.*

*3. சூரியனே, சந்திரனே தேவனைத் துதியுங்கள்*
*ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்*
*அக்கினியே, கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்*
*அக்கினியாய்க் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள்*

*4. பிள்ளைகளே, வாலிபரே தேவனைத் துதியுங்கள்*
*வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்*
*பெரியவரே, பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்*
*செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள்*

*5. ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்*
*அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்*

தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை கிறிஸ்தவர்கள் நிரப்புவார் துதியுங்கள்

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மிஸ். ஜெசிகா**
***I கொரிந்தியர் 12 : 12 - 27*** — Miss. Jessica
Scripture Reading
1 Cor 12 : 12 – 27

**அருளுரை** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Sermon — Pastor. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**<u>ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே</u>**

*1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே*
*அருமையாய் யேசு நமக்களித்த*
*அளவில்லாக் கிருபை பெரிதல்லவோ*
*அனுதின ஜீவியத்தில்*

**ஆத்துமமே என் முழு உள்ளமே**
**உன் அற்புத தேவனையே ஸ்தோத்தரி**
**பொங்கிடுதே என் உள்ளத்திலே**
**பேரன்பின் பெருவெள்ளமே**

*2. கருணையாய் இதுவரை கைவிடாமலே*
*கண்மணிபோல் எமைக் காத்தவரே*
*கவலைகள் போக்கி கண்ணீர் துடைப்பார்*
*கருத்துடன் பாடிடுவோம்*

*3. படகிலே படுத்து உறங்கினாலும்*
*கடும்புயல் அடித்து கவிழ்த்தினாலும்*
*கடலையுங் காற்றையும் அமர்த்தியெமை*
*காப்பாரே அல்லேலூயா*

*4. யோர்தானைக் கடப்போம் அவர் பெலத்தால்*
*எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்*
*இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே*
*என்றென்றுமாய் வாழ்வோம்*

*5. பரிசுத்தவான்களின் பாடுகளெல்லாம்*
*அதி சீக்கிரமாய் முடிகிறதே*
*விழிப்புடன் கூடித் தரித்திருப்போம்*
*விரைந்தவர் வந்திடுவார்*

**அறிவிப்புகள்**
Announcements

✝ **<u>மனப்பாட வசனம்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verse</u> — Congregation

***I கொரிந்தியர் 9 : 22 - 23***
1 Corinthians 9 : 22 - 23

***22. பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப்***
***பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும்***
***சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.***

***23. சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு,***
***அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **போதகர். ஜேசுதாஸ் சார்லஸ்**
Closing Prayer & Benediction — Pastor. Jesudoss Charles

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **⁄ Indicates Congregation standing**